DFCC BANK
Keep Growing

# பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவுகள்

## முக்கிய தகவல்கள் ஆவணம்

## DFCC வங்கியின் பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவுகள் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவுகளை DFCC வங்கியின் ஊடாகச் செலுத்த நீங்கள் விரும்பினால், அக் கொடுப்பனவுகளை இலகுவாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ளும் வழிமுறையை நாம் உங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

உள்ளடக்கம்


| இல. | | பக்க இல. |
|---|---|---|
| 1. | பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு | 3 |
| 2. | DFCC வங்கியினால் பொறுப்பேற்கப்படும் பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு வகைகள் | 3 |
| 3. | பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுக்கல் வாங்கல் ஒன்றை நீங்கள் செற்படுத்துவது எப்படி? | 3 |
| 4. | பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்துவதற்கு எவ்வகையான வங்கியியல் முறைகளைப் பயன்படுத்தலாம்? | 3 |
| 5. | DFCC ஊடாகச் செயற்படுத்தப்படும் பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவுகளுக்குக் கட்டணம் அறவிடப்படுமா? | 3 |
| 6. | பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவைச் செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் எவை? | 4 |
| 7. | பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு தேறுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? | 4 |
| 8. | எம்முடன் தொடர்புகொள்ளுதல் | |

4

## 1. பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு

பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு என்பது மின்சாரம், நீர், முன்கொடுப்பனவு/பின்கொடுப்பனவு மொபைல் முதலிய சேவைகளுக்காக பொதுவசதிச் சேவை வழங்குநர்களுக்குச் செலுத்த வேண்டிய செலவு/கட்டணங்கள் ஆகும்.

இக் கொடுப்பனவை உங்கள் வசதிக்கேற்ப எளிதாகவும் பாதுகாப்பாகவும் செலுத்துவதற்கு DFCC வங்கியின் பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு இலகுவான மற்றும் டிஜிட்டல் முறையிலான ஒரு வழிமுறையாகும்.

## 2. DFCC வங்கியினால் பொறுப்பேற்கப்படும் பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு வகைகள்

இந்த வசதியின் மூலம் உங்கள் வாழ்க்கையை இலகுவாக்குவதற்கு, பின்வரும் பொதுவசதிச் சேவை வழங்குநர்களுடன் DFCC வங்கி இணைந்துள்ளது:

- மொபிட்டெல்
- லங்கா மின்சாரக் கம்பனி (LECO)
- டயலொக் மொபைல்
- டயலொக் TV
- லங்கா பெல்
- இலங்கை மின்சாரச் சபை (CEB)
- ஸ்ரீலங்கா ரெலிகொம் (SLT)
- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
- US வீசா கொடுப்பனவுகள் - கருமபீட கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டும்
- எற்றிசலாட் - Pay & Go இயந்திரத்தின் ஊடாக மட்டும்
- எயார்டெல் - Pay & Go இயந்திரத்தின் ஊடாக மட்டும்

## 3. பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுக்கல் வாங்கல் ஒன்றை நீங்கள் செற்படுத்துவது எப்படி?

DFCC வங்கி பல்வேறு விருப்பத்தேர்வுகளை உங்களுக்கு வழங்குகின்றது. கொடுக்கல் வாங்கலைச் செயற்படுத்த, உங்களுக்கு மிகவும் பொருத்தமான வழியை நீங்கள் பயன்படுத்தலாம்.

நவீன தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதால், கொடுப்பனவைச் செய்வதற்கு நீங்கள் கொடுப்பனவு ஸ்தானத்தில் நேரடியாகச் சமுகமளிக்கத் தேவையில்லை. டிஜிட்டல் தளத்தின் மூலம் கொடுக்கல் வாங்கலைச் செய்யலாம். எனினும், கொடுப்பனவைச் செய்வதற்கு நீங்கள் அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விஜயம் செய்தால், உங்களுக்கு உதவ வங்கி எப்போதும் ஆயத்தமாக இருக்கும்.

### 4. பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்துவதற்கு எவ்வகையான வங்கியியல் முறைகளைப் பயன்படுத்தலாம்?

- ஒன்லைன் வங்கிச் சேவை
- வேர்ச்சுவல் வொலட்
- DFCC Pay & Go
- ATM/CRM
- DFCC கிளைக் கருமபீடங்கள்

### 5. DFCC ஊடாகச் செயற்படுத்தப்படும் பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவுகளுக்குக் கட்டணம் அறவிடப்படுமா?

டிஜிட்டல் தளங்கள் ஊடாகச் செயற்படுத்தப்படும் பெரும்பாலான பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவுகளுக்குக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. எனினும், ஒருசில கருமபீட கொடுக்கல் வாங்கல்களுக்கு ரூ.25 என்ற செயற்படுத்தல் கட்டணம் அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு www.dfcc.lk என்ற வலைத்தளத்திலுள்ள எமது வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலைப் பார்க்கலாம்.

### 6. பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவைச் செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் எவை?

- கொடுக்கல் வாங்கலைச் செய்யும்போது சரியான பொதுவசதிப் பயன்பாட்டுச் சேவை வழங்குநர் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- கட்டாயமாக நிரப்பப்பட வேண்டிய கட்டங்களில் மிகச் சரியான விபரங்கள் நிரப்பப்பட வேண்டும் (உதா: மொபைல் இலக்கம், கட்டணப் பட்டியலின் மறுபெயர், தொகை முதலியன)
- கருமபீட கொடுக்கல் வாங்கலெனின், மேற்குறிப்பிட்டவற்றைத் தவிர, வைப்புச் செய்யப்படுவதற்கு மிகச் சரியான தொகை கொண்டுவரப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும்.

### 7. பொதுவசதிப் பயன்பாட்டுக் கொடுப்பனவு தேறுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

செயற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல், பொதுவசதிப் பயன்பாட்டுச் சேவை வழங்குநரின் கணனி அமைப்பில் இற்றைப்படுத்தப்பட்டதும் அக் கொடுப்பனவு தேறிவிடும். இது ஒரு வேலை நாளுக்குக் கூடுதலாக இருக்காது.

### 8. எம்முடன் தொடர்புகொள்ளுதல்

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். அத்தோடு எமது வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு கிளைக்கு விஜயம் செய்வதன் மூலமும் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ள முடியும்.